DMCOURTKUNNAM

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 727 /2021**

2025- ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 ஆம் நாள் வியாழன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW1 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.பா.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வகுமாரி | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | முருகையன் | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | மூங்கில்பாடி | சமயம் | : | – |
| நாட்டினம் | : | இந்தியன் | வயது | : | 46/2025 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:-

1. இறந்துபோன வாதி குமரேசன் எனக்கு எதிராகவும், செல்வநாயகி, கார்த்திக், கலைவாணி, வட்டாட்சியர் குன்னம் அவர்களுக்கு எதிராக என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார் என்றால் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை நாங்கள் கிரயம் பெற்றதாக சொல்லி எங்களுக்கு எதிராக வழக்கு போட்டுள்ளார். இறந்துபோன வாதி குமரேசன் வழக்கு போட்ட காலத்தில் என்ன ஆவணங்கள் கொடுத்துள்ளார் என்ற விபரமும் நீதிமன்ற விசாரணையில் என்ன ஆவணங்கள் கொடுத்து குறியீடு செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு கிரயம் கொடுத்த கிரய முன்னவர் கிரயம் கொடுப்பதற்கு உரிமை உள்ளது என்று சொல்லி நீதிமன்றத்தில் ஏதாவது பதில் வழக்குரை தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை.

2. என் முதல் விசாரணை வாக்கமூலத்தில் நான் பெற்ற கிரய பத்திரம் குறித்து முறையாக விசாரித்து அரசு வருவாய்துறையினர் எனக்கு பட்டா வழங்கியுள்ளனர் என்று சொல்லியுள்ளதற்கு யார் யாரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அரசு வருவாய்துறையினர் பட்டா வழங்கினர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 11.03.2019 ம் தேதி நான் கிரயம் வாங்குவதற்கு முன்பாக இந்த வழக்கு போட்டுள்ள ராமலிங்கம் மகன் குமரேசன் பெயரில் பட்டா எண். 2180 சர்வே எண். 446/5 உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அது வா.சா.ஆ 1 என்றாலும் அதை பற்றி எனக்கு தெரியாது. 05.08.2019 ம் தேதி குன்னம் கிராம நிர்வாக அலுவலர் தாவா சொத்திற்கு குமரேசன் மக்காசோளம் பயிர் சாகுபடி செய்தார் என்று 1429 ம் பசலிக்கு சாகுபடி அடங்கள் கொடுத்துள்ளார் என்றாலும், அது வா.சா.ஆ 2 என்றாலும் அதை பற்றி எனக்கு தெரியாது. 10.08.2019 ம் தேதி குன்னம் கிராம நிர்வாக அலுவலர் தாவா சொத்திற்கு குமரேசன் மக்காசோளம் பயிர் சாகுபடி செய்தார் என்று 1430 ம் பசலிக்கு சாகுபடி அடங்கள் கொடுத்துள்ளார் என்றாலும், அது வா.சா.ஆ 3 என்றாலும் அதை பற்றி எனக்கு தெரியாது.

3. 07.10.2022 ம் தேதி குன்னம் கிராம நிர்வாக அலுவலர் தாவா சொத்திற்கு குமரேசன் மக்காசோளம் பயிர் சாகுபடி செய்தார் என்று 1432 ம் பசலிக்கு சாகுபடி அடங்கள் கொடுத்துள்ளார் என்றாலும், அது வா.சா.ஆ 4 என்றாலும் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ 5 ஆவணம் தாவா சொத்தில் வாதி குமரேசன் மக்காசோளம் சாகுபடி செய்து வந்தபோது கம்பெனி கொடுத்த போட்டோ மற்றும் சி.டி. தெரியுமா என்றால் தெரியாது, அது வேறு காட்டில் கூட எடுத்திருக்கலாம். தாவா சொத்தை வாதி குமரேசன் அனுபவம் செய்து வந்ததற்கும் 10.11.2022 ம் தேதி பாரத பிரதமர் திட்டத்தின் கீழ் இழப்பீடு பெற்றுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனக்கு கிரயம் கொடுத்த கிரயம் முன்னவர் பெயரில் வாதி பெயரில் இருந்த பட்டாவினை நீக்கம் செய்து சேர்த்து கிரயம் கொடுப்பதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

4. பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பித்தபோது வாதி குமரேசனுக்கு எந்த முன்னறிவிப்பும் கொடுத்ததாக எந்த ஆவணமும் இல்லை என்று காண்பிப்பதற்கு வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 9 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் பத்திரம் பதிவு செய்த சப்ரெஜிஸ்டர் என்ன சாட்சியம் அளித்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது ஆனால் சாட்சியம் அளித்தார். வாதி போட்டுள்ள இவ்வழக்கு சொத்தை 2022 ம் ஆண்டு வரை வாதி குமரேசன் தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. 2023 ம் ஆண்டு குமரேசன் இறக்கும்வரை தாவா சொத்தினை அனுபவம் செய்து வந்தார் என்றால் காட்டுக்காரங்கதான் எனக்கு கிரயம் கொடுத்தவர்கள் தான் அனுபவம் செய்து வந்தார்கள். வாதி குமரேசன் அனுபவித்து வந்த நிலையிலும் 2023 ம் ஆண்டும் எனக்கு கிரயம் கொடுத்த கிரய முன்னவர்கள்தான் 2020 ம் ஆண்டே நான் கிரயம் பெற்றநிலையில் கிரய முன்னவர்கள் தான் வழக்கிற்காக அனுபவம் செய்து வந்தார்கள் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான்தான் பயிர் வைத்தேன்.

5. நான் 2023 ம் ஆண்டு வரை தாவா நிலத்தில் சாகுபடி செய்யவில்லை , சாகுபடி செய்திருந்தால் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் இல்லை. தாவா சொத்தை பொறுத்து நான் இறந்துபோன குமரேசனுக்கு எதிராக இந்த நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். குமரேசன் எப்போது இறந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும் அவரும் வெவ்வேறு ஊரை சேர்ந்தவர்கள். நான் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்தபோது வாதி குமரேசன் உயிரோடு இருந்தாரா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனது கிரய முன்னவர்கள் ஒதியம் கிராமத்தில் இருந்தார்கள் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

DMCOURTKUNNAM

6. எனக்கு கிரயம் கொடுத்தவர்களை இந்நீதிமன்றத்தில் சாட்சிகளாக விசாரிக்கிறீர்களா என்றால் நாங்களும் கேட்கவில்லை விசாரிக்கவும் மாட்டோம். உண்மையான கிரயம் உண்மையானதாக இருந்திருந்தால் என் கிரய முன்னவர்களை சாட்சியாக விசாரிக்க ஒப்புக்கொண்டிருப்பேன் பொய் கிரயம் என்பதால் தான் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எனக்கு கிரயம் கொடுத்தவர்கள் ஓதியம் கிராமத்தில் வசிக்கவில்லை, தாவா சொத்து கிரய முன்னவர்கள் அனுபவம் செய்யவில்லை, கிரயம் கொடுக்கவும் உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. ராமலிங்கம் மகன் குமரேசன் பெயரில் இருந்த சொத்து அவர் உயிருடன் இருக்கும் வரை குமரேசன் தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் இல்லை, நாங்கள் தான் அனுபவம் செய்து வந்தோம்.

7. நான் சொல்வதுபோல் 2022ம் ஆண்டு வரை தாவா சொத்தை நான் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான்தான் அனுபவம் செய்து வந்தேன். வழக்கு போடுவதற்கு வெகு காலத்திற்கு முன்பே சுமார் 30 வருடங்களாகவே குமரேசன் தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல , எனக்கு விற்றவர்தான் அனுபவம் செய்து வந்தார். ஒருபோதும் எனக்கு கிரயம் கொடுத்தவர்கள் தாவா சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றாலும், அதற்கு சாகுபடி அடங்கலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எந்தவித உரிமையும் இல்லாத கிரய முன்னவர்களிடம் நான் முறைகேடாக கிரயம் பெற்று வழக்கு போட்ட குமரேசன் அனுபவத்தை இடையூறு செய்ததாலயே குமரேசன் வழக்கு போட்டார் என்றும், குமரேசன் போட்ட வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதி குமரேசன் விளம்புகை பரிகாரம் கேட்டுள்ள நிலையில் அதற்கு நான் மறுத்து எந்தவித எதிர்உடைமை பாத்தியமும் கோராததால் வாதி போட்ட வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCOURT, KUNNAM